திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தென்னை வளர்ப்பில் தமிழகம் முதலிடம் பிடிக்கும்**

First Published : 28 Jan 2011 08:37:09 AM IST

குடியாத்தம், ஜன.27: தென்னை வளர்ப்பில் விரைவில் தமிழகம் முதலிடத்தைப் பிடிக்கும் என ஊரகத் தொழில்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் பொங்கலூர் நா. பழனிச்சாமி கூறினார்.

தமிழகத்திலேயே முதலாவதாக குடியாத்தம், சேலம், கடலூர், பட்டுக்கோட்டை, பெரியகுளம் ஆகிய 5 ஊர்களில் கயிறு குழுமங்களின் பொது பயன்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குடியாத்தம் அடுத்த பாக்கம் கிராமத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற இதன் தொடக்க விழாவில் அமைச்சர் பேசியது:

தென்னை மர சாகுபடியில் கேரள மாநிலம் முதலிடத்தில் உள்ளது. அம்மாநில விவசாயிகள் தற்போது தென்னையைத் தவிர்த்து அதிக லாபம் தரும் ரப்பர் மரங்களை வளர்ப்பதில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர். இதனால் தென்னை சாகுபடியில் 2ஆம் இடத்தில் உள்ள தமிழகம் விரைவில் முதலிடம் பிடிக்கும்.

தென்னை ஒரு பணப் பயிர் என்பதாலும், இதற்கு ஆள்தேவை குறைவு என்பதாலும் தமிழக விவசாயிகள் இதை அதிக அளவில் பயிரிடுகின்றனர். தமிழகத்தில் 3,57,100 ஹெக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. இதன் மூலம் சுமார் 3,243 மில்லியன் தேங்காய்கள் ஆண்டு தோறும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்திய கயிறு வாரியம் மூலம் மாநிலத்தில் இன்று 5 இடங்களில் கயிறு குழுமங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஆறாவதாக விரைவில் சிங்கம்புணரியில் குழுமம் தொடங்கப்படும். தொடங்கப்பட்டுள்ள ஒவ்வொரு குழுமத்திற்கும் மத்திய அரசு மானியத்துடன் கூடிய நிதியாக தலா ரூ.1 கோடி வழங்கியுள்ளது.

25 உறுப்பினர்களைக் கொண்ட இக்குழுமங்கள் மூலம் தென்னைநார் உற்பத்தி, கயிறு உற்பத்தி, சுருள் கயிறு உற்பத்தி, நார்க்கழிவு கட்டிகள் உற்பத்தி ஆகியவற்றை உற்பத்தி செய்ய முடியும்.

இந்தியாவில் தென்னை நார்த் தொழிலில் சுமார் 5 லட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர். அதில் தமிழகத்தில் மட்டும் 2 லட்சம் பேர் அடங்குவர். இதில் 80 சதவீதம் பெண்கள். புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள குழுமங்களில் தலா சுமார் 500 பேருக்கு வேலை கிடைக்கும் என்றார் அவர்.

குடியாத்தம் பொது பயன்பாட்டு மைய அலுவலகத்தை திறந்து வைத்து கொச்சியைச் சேர்ந்த கயிறு வாரியத் தலைவர் வி.எஸ். விஜயராகவன் பேசியது:

அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமியின் கோரிக்கையை ஏற்று தமிழகத்தில் உள்ளமற்ற மாவட்டங்களிலும் இதுபோன்ற கயிறு குழுமங்கள் தொடங்க நிதி ஒதுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.கடந்த ஆண்டு தென்னை நார்ப் பொருள்கள் ஏற்றுமதி ரூ.800 கோடியாக இருந்தது. புதிய குழுமங்கள் தொடங்கப்பட்டுள்ளதால் ஏற்றுமதியின் அளவு நடப்பாண்டு ரூ. 1,000 கோடியாக உயர வாய்ப்புள்ளது என்றார்.

மாவட்ட ஆட்சியர் செ. ராஜேந்திரன் தலைமை வகித்தார். தமிழக தொழில்துறை ஆணையர் ஹர்மந்தர்சிங், கயிறு வாரிய செயலர் எம். குமாரராஜா, அரசு போக்குவரத்துக் கழக ஆலோசனைக் குழு உறுப்பினர் குடியாத்தம் குமரன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஜி.ஆர். கிருஷ்ணமூர்த்தி, குடியாத்தம் கயிறு குழும நிர்வாக இயக்குநர் ஆர். ஜெகதீசன், அரசு மருத்துவமனை ஆலோசனைக் குழு உறுப்பினர் கள்ளூர் கே. ரவி, முன்னாள் எம்எல்ஏ வி.ஜி. தனபால், மாவட்ட தொழில்மைய பொதுமேலாளர் நா. ஜெயபாலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பட்டு வளர்ச்சித் துறையில் மானியத்தை அதிகரிக்க விவசாயிகள் கோரிக்கை**

First Published : 28 Jan 2011 08:34:20 AM IST

வேலூர், ஜன. 27: பட்டு வளர்ச்சித் துறை சார்பில் வழங்கப்படும் மானியத்தை அதிகரித்து வழங்க வேண்டும் என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

வேலூர் ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஆட்சியர் செ. ராஜேந்திரன் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

விவசாயிகள் தெரிவித்த கோரிக்கைகள்:

ஆம்பூர் பகுதியில் மணல் திருட்டை தடுக்க வேண்டும், வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டங்களை தொடர்ந்து நடத்த வேண்டும், விவசாயிகளின் குழந்தைகளுக்கு கல்விக்கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும், மாதனூரில் தரமற்ற விதைநெல் வழங்கிய வேளாண்துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், குரங்குகளால் விவசாயப் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்துக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றனர். விவசாயிகளின் ஒவ்வொரு கோரிக்கை, குற்றச்சாட்டுகளுக்கும் அந்தந்த துறையைச் சேர்ந்த அதிகாரிகள் பதிலளித்தனர். இதுதொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி அளித்தனர்.

**தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி**

First Published : 28 Jan 2011 08:20:07 AM IST

வந்தவாசி, ஜன. 27: தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கான பயிற்சி முகாம் வந்தவாசி வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் துல்லிய பண்ணை திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம், நுண்ணீர் பாசன திட்டம், தேசிய மூங்கில் இயக்கம், தேசிய மூலிகை பயிர்கள் இயக்கம் உள்ளிட்டவை குறித்து விளக்கப்பட்டது. வந்தவாசி எம்எல்ஏ ஜெ.கமலக்கண்ணன் பயிற்சி முகாமை தொடங்கி வைத்து பேசினார். வந்தவாசி தோட்டக்கலை உதவி இயக்குநர் மு.ரவி, வந்தவாசி வேளாண் உதவி இயக்குநர் செல்வராஜ் ஆகியோர் பயிற்சி அளித்தனர். உதவி வேளாண்மை அலுவலர்கள் டி.குப்பன், எம்.நரசிம்மபல்லவன், ஈ.முருகதாஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விதை கிராமத் திட்ட பயிற்சி முகாம்**

First Published : 28 Jan 2011 08:36:09 AM IST

அரக்கோணம், ஜன. 27: நெமிலி ஒன்றியம், கோடம்பாக்கத்தில் விதை கிராமத் திட்டம் சார்பில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

வேளாண்மைத் துறையின் வட்டார உதவி இயக்குநர் ஒய்.எம்.முபாரக் தலைமை தாங்கினார்.

உதவி விதை அலுவலர் ஏழுமலை, உதவி வேளாண் அலுவலர் கணேசன், பழனி,ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் கோபிநாத் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமலர்

**கத்தரி, தக்காளி பல்லாரி விலை சரிவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,04:03 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி உழவர் சந்தையில் ஒரே நாளில் பெரிய வெங்காயம் கிலோவுக்கு 10 ரூபாய் வரை குறைந்தது. கத்தரிக்காய், தக்காளி விலையும் படிப்படியாக குறைந்து வருகிறது.

கோபி வட்டாரத்தில் 10 ஆண்டுகளில் இல்லாத வகையில், அக்டோபரில் பெய்த மழையால் காய்கறிகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஜனவரி மாதம் 43 ரூபாயாக இருந்த ஒரு கிலோ தக்காளி, கோபி உழவர் சந்தையில் நேற்று 13 ரூபாயாக விலை சரிந்தது. கத்தரிக்காய் 32 ரூபாயிலிருந்து 20 ரூபாய், பீட்ருட் 24 ரூபாயிலிருந்து 20 ரூபாய், காலிபிளவர் 14 ரூபாயிலிருந்து 12 ரூபாய், அவரை 45 ரூபாயிலிருந்து 20 ரூபாய்க்கு விற்றது. பெரிய வெங்காயம் 60 ரூபாயில் இருந்து படிப்படியாக குறைந்து நேற்று முன்தினம் 48 ரூபாய்க்கு விற்றது. நேற்று ஒரே நாளில் மேலும் 10 ரூபாய் வரை குறைந்து, 38 ரூபாய்க்கு விற்றது.

பொதுவாக காய்கறி சாகுபடி செய்யப்பட்ட 45 நாளில் இருந்து 60 நாட்களுக்குள் அறுவடையாகிவிடும். பலத்த மழை காரணமாக காய்கறி சாகுபடி கோபி வட்டாரத்தில் விறுவிறுப்பாக துவங்கியுள்ளது. ஃபிப்ரவரி மாதம் முதல் புதிய காய்கறிகள் உழவர் சந்தை மற்றும் மார்க்கெட்டுக்கு வரத் துவங்கி விடும். வரும் மாதங்களில் விலை மேலும் குறையும் என, விவசாயிகள் தெரிவித்தனர்.

**வரத்து அதிகரிப்பால் பெரிய வெங்காயம் விலை திடீர் சரிவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,04:08 IST

சேலம்: தமிழகத்துக்கு பெரிய வெங்காயத்தின் வரத்து அதிகரித்ததன் எதிரொலியாக அதன் விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது. மஹாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திர மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு பெரிய வெங்காயத்தின் வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டது. கடந்த இரண்டு மாதத்தில் மட்டும் 15 முறை விலை உயர்வை சந்தித்தது. தமிழகத்தில் அதிகபட்சமாக கிலோ 85 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

தமிழகத்துக்கு தேவையான பெரிய வெங்காயம் மஹாராஷ்டிரா, கர்நாடகா ஆகிய பகுதிகளில் இருந்து விற்பனைக்கு வருகிறது. தமிழகத்தில் வெங்காய விளைச்சலுக்கு பெயர் பெற்ற பொள்ளாச்சி, உடுமலைப் போட்டை ஆகிய பகுதிகளில் டும் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் நாடு முழுவதும் வெங்காயத்துக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. தட்டுப்பாட்டை சரி செய்யும் வகையில் பாகிஸ்தானில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டது.

தட்டுப்பாட்டை சாதகமாக பயன் படுத்திக் கொண்ட வியாபாரிகள் வெங்காயத்தை பதுக்கலிலும் ஈடுபட்டனர். மத்திய, மாநில அரசுகளின் நடவடிக்கையால் தற்போது மார்க்கெட்டுக்கு வெங்காய வரத்து அதிகரித்துள்ளது. கோயம்பேடு, மதுரை, சேலம் லீபஜார், விருதுநகர் ஆகிய இடங்களில்

வெங்காயத்தின் வரத்தில் 50 சதவீதம் வரை திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது. வெளி மார்க்கெட்டில் பெரிய வெங்காய விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. சேலத்தில் பெரிய வெங்காயம் கிலோ 75 ரூபாய் முதல் 85 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. நேற்று 40 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை சரிவு ஏற்பட்டு, கிலோ 30 ரூபாய் முதல் 35 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

மொத்த விலையில் 50 கிலோ மூட்டை 3,800 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட பெரிய வெங்காயம் 1,500 ரூபாய் முதல் 1,800 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. பெரிய வெங்காயத்தின் வரத்து அதிகரித்துள்ளதால், விலையில் மேலும் சரிவு ஏற்படும் என வியாபாரிகள் தெரிவித்தனர். பெரிய வெங்காயத்தின் விலை சரிவை சந்தித்துள்ள நிலையில் சின்ன வெங்காயத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் வரை சின்ன வெங்காயம் கிலோ 50 ரூபாய்க்கு விற்றது. நேற்று கிலோவுக்கு மூன்று ரூபாய் அதிகரித்து 53 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

**வளர்ப்பு மீன்களை பாதுகாக்கும் பாசி காவிரியில் சேகரிக்கும் பணியாளர்கள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,04:08 IST

மேட்டூர்: தனியார் பண்ணைகளில் வளர்க்கும் மீன்களை பாதுகாக்க, காவிரியில் படந்துள்ள பாசிகளை வாகனங்களில் ஏற்றி, உரிமையாளர்களை எடுத்து செல்கின்றனர். அம்மாப்பேட்டை, அந்தியூர், பவானி பகுதியில் தனியார் மீன் பண்ணைகள் உள்ளன. இந்த பண்ணைகளில் மீன் குஞ்சுகள், மீன்கள் வளர்த்து விற்பனை செய்யப்படுகின்றன. பண்ணைகளில் வளர்க்கும் மீன்களுக்கு, தவிடு உள்பட பல்வேறு உணவுகளை பண்ணையாளர்கள் வழங்குகின்றனர். ஆறு மற்றும் ஏரிகளில் படரும் பாசிகள் இடையே வசிக்கும் மீன்கள், அந்த பாசிகளில் உள்ள பாக்டீரியாக்களை உணவாக உட்கொள்கின்றன. எனவே, அந்த மீன்கள் ஆரோக்யமாகவும், விரைவாகவும் வளர்வதாக பண்ணை உரிமையாளர்கள் நம்புகின்றனர். மேட்டூர் அணை அடிவாரத்தில் உள்ள காவிரியாற்றில் பாசிகள் அதிக அளவில் படந்துள்ளது. எனவே, மீன் பண்ணை பணியாளர்கள், காவிரியாற்றில் படர்ந்துள்ள பாசிகளை சேகரித்து, வாகனங்களில் ஏற்றி பண்ணைக்கு எடுத்து செல்கின்றனர். பண்ணைகளில் உள்ள தொட்டிகளில் கொட்டப்படும் பாசிகள் நீரில் படர்ந்து வளர்வதால், அதில் மீன்கள் நன்கு வளர்கிறது என, பண்ணை உரிமையாளர்கள் தெரிவித்தனர். பாசிகளை பண்ணை உரிமையாளர் சேகரிப்பதால், காவிரியாறு சுத்தமாகிறது.

## மழை பாதிப்பு விவசாயிக்கு ரூ.13.7 லட்சம் நிவாரணம்

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,03:48 IST

கரூர்: "கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 13.7 லட்சம் ரூபாய் நிவாரணம் அளிக்கப்படுகிறது' என, கரூர் கலெக்டர் உமாமகேஸ்வரி அறிவித்துள்ளார். அறிக்கையில் உள்ளதாவது: கரூர் மாவட்டத்தில் கடந்தாண்டு பெய்த வடக்கிழக்கு பருவமழையில் பாதிக்கப்பட்ட பயிர் சேதம் கணக்கிடப்பட்டு, அரசு சார்பில் 13 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இத்தொகை வழங்கப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களால், தொடர்புடைய விவசாயிகளின் சேமிப்பு கணக்குகளில் நிவாரண தொகை வரவு வைக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் நிவாரண தொகை பெற்றுக்கொள்ளலாம்.

## சிறு வியாபாரிகள் கொள்முதல் அதிகம்: உழவர் சந்தை வாடிக்கையாளர் அவதி

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,03:39 IST

தர்மபுரி: தர்மபுரி உழவர் சந்தையில் சிறு வியாபாரிகள் அதிக அளவில் கொள்முதல் செய்ய துவங்கியிருப்பதால், வாடிக்கையாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர். விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்ட விவசாயிகள், காய்கறிகளை நேரடியாக விற்பனை செய்ய வசதியாக தர்மபுரி, அரூர், பென்னாகரம் ஆகிய இடங்களில் உழவர் சந்தைகள் துவங்கப்பட்டுள்ளது. தர்மபுரி உழவர் சந்தையில், தினமும் ஆயிரக்கணக்கான நுகர்வோர் காய்கறிகள் வாங்கி செல்கின்றனர். பண்டிகை காலங்கள் மற்றும் சனி, ஞாயிறு அரசு விடுமுறை நாட்களில், சந்தையில் கூட்டம் அலைமோதும். சமீபகாலமாக வெளி மார்க்கெட்டில் காய்கறி விலை பல மடங்கு அதிகரித்து இருப்பதாலும், வெளி மார்க்கெட்டை விட கிலோவுக்கு 4 ரூபாய் முதல் ஆறு ரூபாய் வரை விலை குறைவு என்பதாலும், பெரும்பாலான மக்கள் உழவர் சந்தைக்கு வருகின்றனர். தற்போது, காலை நேரத்தில் அதிக பனிக்காற்றின் தாக்கம் இருப்பதால், 7 மணிக்கு மேல்தான் நுகர்வோர் அதிகம் வருகின்றனர். சமீப காலமாக, அதிக அளவில் உள்ளூர் சிறு வியாபாரிகள் சந்தையில் அதிக அளவில் கொள்முதல் செய்ய துவங்கியுள்ளனர். அதனால், 7 மணிக்கு மேல் வரும் நுகர்வோர் காய்கறிகள் கிடைக்காமல் திரும்பி செல்லும் நிலையுள்ளது. காய்கறிக்கு சந்தை விலை கிடைப்பதால், மொத்தமாக வாங்கும் சிறு வியாபாரிகளுக்கு அதிக

முக்கியத்துவம் கொடுத்து விவசாயிகள் காய்கறிகளை விற்பனை செய்வது அதிகரித்துள்ளது. அதை கட்டுப்படுத்த முடியாமல், உழவர் சந்தை பொறுப்பாளர்கள் திணறி வருகின்றனர். உழவர் சந்தையில், பெரும்பாலான விவசாயிகள் வியாபாரிகளை குறி வைத்து விற்பனை செய்வதும், அடையாள அட்டைகள் இல்லாத சிறு விவசாயிகளிடம் இருந்து காய்கறிகளை வாங்கி விற்பனை செய்வதும் நடந்து வருகிறது. இது போன்ற விற்பனையை கட்டுப்படுத்த, உழவர் சந்தை பொறுப்பாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, நுகர்வோர் எதிர்பார்க்கின்றனர்.

**நெல்லுக்கு அதிக விலை கேட்டு மறியல் விக்கிரவாண்டியில் போக்குவரத்து பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,03:07 IST

விக்கிரவாண்டி : விக்கிரவாண்டி மார்க்கெட் கமிட்டியில் நெல்லுக்கு அதிக விலை கேட்டு விவசாயிகள் மறியலில் ஈடுபட்டதால் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதித்தது. விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி மார்க்கெட் கமிட்டிக்கு 137 விவசாயிகள் 2,200 நெல் மூட்டைகளை நேற்று விற்பனைக்கு கொண்டு வந்தனர். மறைமுக நெல் ஏலத்தில் 16 வியாபாரிகள் கலந்து கொண்டனர். பிற்பகல் 12 .45 மணிக்கு கண்காணிப்பாளர் கிருஷ்ணதாஸ் நெல் ஏலத்தில் குறிப்பிட்டுள்ள விலையை வாசித்தார். இதில் நேற்று 75 கிலோ குண்டுரகம் அதிக பட்சம் 717 ரூபாய்க்கும், குறைந்த பட்சம் 380 ரூபாயும், ஏ.டி.டி.39 ரக நெல் அதிகபட்சம் 672 ரூபாயும், குறைந்தபட்சம் 575 ரூபாயும் , வெள்ளை பொன்னி அதிகபட்சம் 817 ரூபாயும், குறைந்த பட்சம் 687 ரூபாயும், பபட்லால் நெல் அதிகபட்சம் 769 ரூபாயும், குறைந்த பட்சம் 597 ரூபாயும், கோ.15 ரக நெல் அதிகபட்சம் 689 ரூபாயும், குறைபட்சம் 472 ரூபாயும் நிர்ணயம் செய்திருந்தனர். ஏலத் தொகையை வாசித்த நேரத்தில் காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் இருந்து கள பயணமாக வந்திருந்த விவசாயி ஒருவர், கண்காணிப்பாளர் கிருஷ்ணதாசிடம் தங்கள் பகுதியில் இதே ரக நெல் குவிண்டாலுக்கு 1050 ரூபாய் வரை விற்பதாக கூறினார். இதை கேட்ட உள்ளூர் விவசாயிகள் தங்கள் நெல்லுக்கு தான் வியாபாரிகள் விலை குறைத்து கணக்கிட்டதாக நினைத்து, நெடுஞ்சாலையில் இருபுறமும் அமர்ந்து திடீர் மறியலில் ஈடுபட்டனர். இருபுறமும் 1 கி.மீ., தூரத்திற்கு வாகனங்கள் அணிவகுத்து நின்றன. தகவலறிந்த இன்ஸ்பெக்டர் சுரேஷ்பாபு, சப்-இன்ஸ்பெக்டர் கோபால கிருஷ்ணன் , வருவாய் ஆய்வாளர் கண்ணன், வி.ஏ.ஓ.,முனுசாமி விவசாயிகளிடம் பேசினர். பின்னர் விவசாயிகள் கமிட்டி எதிரே திரண்டு தங்களது நெல்லுக்கு சராசரியாக ரூபாய் 50 கூடுதலாக வழங்க வேண்டும் என கூறினர். வியாபாரிகள் குறிப்பிட்டுள்ள விலை நெல்லின் தரத்தை பொறுத்து கூறப்பட்டுள்ளது. இந்த விலை சரியில்லை என கருதும் விவசாயிகள் தங்களது நெல்லை வாபஸ் பெற்று மறுநாள் ஏலத்தில் கலந்து கொள்ள லாம் என

கூறியதால் விவசாயிகள் சமாதானமடைந்து கலைந்து சென்றனர். இந்த சம்பவத்தால் சென்னை-திருச்சி சாலையில் 30 நிமிடம் போக்குவரத்து பாதித்தது.

**கமிட்டிக்கு நெல் வரத்து அதிகரிப்பு கொள்முதல் நிலையம் திறக்கப்படுமா?**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,03:09 IST

செஞ்சி : செஞ்சி மார்க்கெட் கமிட் டிக்கு நெல் வரத்து அதிகரித்து விலை வீழ்ச்சி ஏற்படும் நிலை உள்ளதால் நேரடி கொள்முதல் நிலையத்தை அரசு திறக்க வேண்டும். செஞ்சி தாலுகாவில் தீவிர நெல் அறுவடை நடந்து வருகிறது. இதனால் செஞ்சி மார்க்கெட் கமிட்டிக்கு நெல் வரத்து அதிகரித்துள்ளது. கடந்த 24ம் தேதி 20 ஆயிரம் மூட்டைகள் வந்ததால் 2 தினங்களுக்கு மூட்டைகளை அனுமதிக்கவில்லை. நேற்று மீண்டும் 20 ஆயிரம் மூட்டைகள் குவிந்தன. இதில் ஒரு பகுதி நேற்று ஏலம் விடப்பட்டது. மீதமுள்ள மூட்டைகள் இன்று ஏலம் விடப்படும். செஞ்சியில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நெல் விளைச்சல் அமோகமாக உள்ளது. ஆனால் விலை கடந்த ஆண்டை விட குறை வாக உள்ளது. ஒரு மூட்டை பொன்னி நெல் 150 ரூபாய் வரையும், குண்டு நெல் எனப்படும் சிஆர். 1000 ரக நெல் 200 ரூபாய் வரை விலை குறைந்துள்ளது. செஞ்சியில் இருந்து தென் மாவட்டங்களுக்கு அதிகளவில் நெல் ஏற்றுமதியாகிறது. இந்த ஆண்டு தமிழகத்தில் நெல் விளைச்சல் நன்றாக இருப்பதால் வெளி மாவட்டங்களில் தேவை குறைந்துள்ளது. எனவே நெல் விலை மேலும் குறையுமென வியாபாரிகள் கூறினர். செஞ்சி மார்க்கெட் கமிட்டிக்கு தொடர்ந்து 2 மாதத்திற்கு நெல்வரத்து இருக்கும். இதனால் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டால் விவசாயிகள் அதிகளவில் பாதிப்பர். இதை தடுக்க செஞ்சியில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும்.

**தென்னை நல வாரியத்தில் சேர விவசாயிகளுக்கு விண்ணப்பம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 27,2011,22:38 IST

விருத்தாசலம் : தென்னை விவசாயிகள் தென்னை நல வாரியத்தில் உறுப்பினராக சேர விண்ணப்பங்கள் வழங்கப்படுகிறது. இதுகுறித்து தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிமொழி விடுத்துள்ள செய்திக்குறிப்பு:
விருத்தாசலம் வட்டாரத்தை சேர்ந்த தென்னை பயிரிடும் விவசாயிகள் தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நல வாரியம் திட்டத்தில் உறுப்பினராக சேர்ந்து பயனடையலாம். அதற்கான

விண்ணப்பங்கள் ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் வழங்கப்படுகிறது. குறைந்தது 70 தென்னை மரங்கள் கொண்ட விவசாயிகள் தங்கள் முகவரியை பதிவு செய்து விண்ணப்பங்களை வாங்கி பூர்த்தி செய்து கொடுக்குமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**நெல் குவிண்டாலுக்கு ரூ.1,500 வழங்கக்கோரி ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,03:22 IST

தஞ்சாவூர்: தஞ்சை கலெக்டர் அலுவலகம் பனகல் கட்டிடம் முன் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

நெல் குவிண்டாலுக்கு ஆயிரத்து 500 ரூபாய் வழங்க வேண்டும். கரும்பு டன்னுக்கு மூன்றாயிரம் ரூபாய் வழங்க வேண்டும். பால் கொள்முதல் விலையை பசும்பாலுக்கு ஐந்து ரூபாயும், எருமை பாலுக்கு எட்டு ரூபாயும் உயர்த்தி வழங்க வேண்டும். தஞ்சை தாலுகா செங்கிப்பட்டி பஞ்சாயத்து அயோத்திப்பட்டியில் விவசாயிகள் பயன்படுத்திய அரசுக்கு சொந்தமான வாரி, சாலையை தனியார் நிறுவனம் ஆக்ரமித்துள்ளது. இதை அப்புறப்படுத்த வேண்டும், என வலியுறுத்தினர். பூதலூர் ஒன்றிய செயலாளர் ராமச்சந்திரன், தஞ்சை ஒன்றிய செயலாளர் ஞானமாணிக்கம் ஆகியோர் தலைமை வகித்தனர். பூதலூர் ஒன்றிய தலைவர் முருகேசன், மாவட்டக்குழு உறுப்பினர் வைத்தியநாதசாமி, மாவட்ட செயலாளர் சாமிநடராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் நீலமேகம் உட்பட பலர் பேசினர்.

**விவசாய சங்கத்தினர் நூதன ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,03:21 IST

கும்பகோணம்: கும்பகோணம் அருகே திருவிடைமருதூர் கடைவீதியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

நெல் மூடைகளையும், கரும்புகளை வைத்துக் கொண்டு கோஷங்கள் எழுப்பினர். நெல்லுக்கு கட்டுப்படியான விலை வழங்க வேண்டும். கரும்பு டன் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வழங்க வேண்டும். தனியார் ஆலை வாங்கும் கரும்பு வெட்டும் இயந்திரத்தையே மாநில அரசு வாங்க வேண்டும் என்பது உட்பட பல கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர். ஒன்றிய செயலாளர் காசிநாதன், முருகேசன் ஆகியோர் தலைமை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் மாவட்டக்குழு சின்னை பாண்டியன், நடராஜன், சிக்கண்ணன், மணி, பக்கிரிசாமி, சங்கர் உட்பட பலர் பங்கேற்றனர்.

**மதுரையில் 8 மலிவுவிலை காய்கறி விற்பனை மையங்கள் துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,01:50 IST

மதுரை: காய்கறி விலையை கட்டுப்படுத்த, மதுரையில் 8 இடங்களில் மலிவுவிலை காய்கறி விற்பனை மையங்கள் துவக்கப்பட்டன.காய்கறிகள் விலைஉயர்வை கட்டுப்படுத்த கூட்டுறவுத் துறை சார்பில், மலிவு விலை விற்பனை மையங்களை அரசு துவக்கியுள்ளது. மதுரையில் எல்லீஸ்நகர், விசுவாசபுரி, மதுரை கோட்ஸ், ஆர்.எம்.எஸ்., ரோடு, ரேஸ்கோர்ஸ் காலனி, பொன்மேனி அரசு போக்குவரத்துக் கழக பணிமனை, அண்ணாநகர், டி.வி.எஸ்., நகர் பகுதிகளில் காய்கறிகள் விற்பனை செய்யப்பட உள்ளன. இம்மையங்களை நேற்று கலெக்டர் காமராஜ் துவக்கி வைத்தார்.இதில் கூட்டுறவு துணைப் பதிவாளர் வானதி, நேர்முக உதவியாளர் ஜெயசிங்ஞானதுரை, தாசில்தார் கல்யாணசுந்தரம் கலந்து கொண்டனர். கலெக்டர் கூறியதாவது: இம்மையங்கள் புறநகர் பகுதிகளில் மேலூர், வாடிப்பட்டி, ஒத்தக்கடை பகுதிகளிலும் திறக்கப்பட உள்ளன. இடைத்தரகர்களுக்கு இங்கு அனுமதி யில்லை. வியா பாரிகளை தவிர்க்க, ஒரு வீட்டுக்கு தேவையான அளவில் ஒன்று அல்லது இரண்டு கிலோ அளவில் விற்பனை செய்யப்படும். நாளை முதல் பச்சை மிளகாய், காரட், பீட்ரூட், முட்டைக்கோஸ் போன்றவையும் விற்பனை செய்யப்படும். லாப நோக்கின்றி, பொதுமக்களின் வசதிக்காகவே இம்மையங்கள் செயல்படும். இவ்வாறு அவர் கூறினார்.இணைப்பதிவாளர் கே.வி.எஸ்.குமார் கூறுகையில், ""இம்மையங்கள் காலை 9 முதல் மாலை 6.30 மணி வரை செயல்படும். தேவையான காய்கறிகளை தொடக்க கூட்டுறவு வங்கிகளின் செயலாளர்கள் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்து அனுப்புகின்றனர்," என்றார்.

**டெல்டாவில் 2.20 லட்சம் டன் நெல் கொள்முதல் : நுகர்பொருள் வாணிபக்கழக எம்.டி., தகவல்.**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,03:22 IST

தஞ்சாவூர்: காவிரி டெல்டா மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நிர்வாக இயக்குனர் வீரசண்முகமணி திருப்பனந்தாள், சோழபுரம், திருநாகேஸ்வரம், திருக்கருக்காவூர், களஞ்சேரி, குளிச்சப்பட்டு, வடக்கூர் போன்ற நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஆய்வு செய்தார்.

தஞ்சையில், அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட பின், அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியதாவது: கடந்த 2009 - 10 காரீப் பருவத்தில் 1,364 நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு தமிழகத்தில் 18.63 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. 2010 - 11 காரீப்

பருவத்தில் டெல்டாவில் 13 லட்சம் டன் உட்பட தமிழகத்தில் 16 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய திட்டமிட்டு, முன்னேற்பாடு செய்யப்பட்டுள்ளது.
சாதாரண நெல் குவிண்டால் 1,050 ரூபாய்க்கும், சன்னரக நெல் குவிண்டால் 1,100 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது. தற்போது 20 சதவீத ஈரப்பதம் வரையும், சேதமடைந்த, நிறம் மாறிய, முளைவிட்ட இனங்களில் ஐந்து சதவீதம் வரையிலும் உள்ள நெல்லையும் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு காரீப் பருவத்தில் மாவட்ட வாரியாக தஞ்சை 307, திருவாரூர் 379, நாகை 235 என டெல்டாவில் 921 கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு ஒரு லட்சத்து 88 ஆயிரத்து 934 டன் நெல்லும், பிற மாவட்டங்களில் 52 கொள்முதல் நிலையம் மூலம் 30 ஆயிரத்து 574 டன், கூட்டுறவுத்துறை மூலம் 947 டன் என மாநிலத்தில் இரண்டு லட்சத்து 20 ஆயிரத்து 455 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.
உடனுக்குடன் விவசாயிகளுக்கு தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப கூடுதல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும். கொள்முதலுக்கு தேவையான சாக்கு, பணம், மின்னணு தராசு, ஈரப்பதமானி, தளவாட கருவிகள், பொருட்கள் தயார் நிலையில் உள்ளது. டெல்டாவில் கொள்முதல் செய்யப்படும் 13 லட்சம் டன் நெல்லில் 5.50 லட்சம் டன் நெல் டெல்டா மாவட்டங்களில் சேமிப்பு மையங்களில் இருப்பு வைத்துவிட்டு, 7.50 லட்சம் டன் நெல் பிற மாவட்டங்களுக்கு ரயில், லாரி மூலம் இயக்கம் செய்யப்படும்.
விரைவான கொள்முதலுக்காக 1,375 பட்டியல் எழுத்தர்கள், 1,433 உதவியாளர்கள், 1,687 காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தேவைக்கேற்ப உடனுக்குடன் பணம் வழங்க தேவையான சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளிடம் இருந்து எவ்வித புகாருக்கும் இடமின்றி கொள்முதல் செய்ய அலுவலர்களுக்கு யோசனை வழங்கப்பட்டுள்ளது. நெல் 300 மூடைக்கு மேல் இருப்புள்ள விவசாயிகளிடம் அவர்களது களம், இருப்பிடம் சென்று கொள்முதல் செய்யப்படும். அங்கேயே பணம் பட்டுவாடா செய்ய சிறப்பு குழு நேற்று முன்தினம் முதல் செயல்படுகிறது. கடந்தாண்டு போல நடப்பாண்டிலும் தலைமை அலுவலகத்தில் விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் கோரிக்கைகள் மற்றும் புகார்கள் குறித்து உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள கட்டுப்பாட்டு அறை செயல்படுகிறது. தவிர, தலைமை அலுவலகத்தில் இருந்து விழிப்பு பணி அலுவலர்கள் தலைமையில் ஐந்து குழுக்கள் திடீர் தணிக்கை செய்யவும், நடவடிக்கை எடுக்கவும் செயல்படுகின்றனர். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பணிபுரியும் பட்டியல் எழுத்தர்கள், உதவியாளர்கள் விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்யும்போது கூடுதல் எடை மற்றும் மாமுல் கேட்டு நிர்பந்தம் செய்தால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அறுவடை தொடங்கியது; மகசூல் இல்லைபெல்லாரி, வெங்காய விவசாயிகள் பாதிப்பு

பதிவு செய்த நாள் : ஜனவரி 27,2011,23:55 IST

ஒட்டன்சத்திரம்: எதிர்பார்த்த அளவிற்கு விளைச்சல் இல்லாமல் போனதால் பெல்லாரி, வெங்காயம் பயிரிட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு நடப்பட்ட பெல்லாரி வெங்காயம் அறுவடை ஒட்டன்சத்திரம் பகுதியில் உள்ள காளாஞ்சிபட்டி, அத்திக்கோம்பை உள்ளிட்ட கிராமங்களில் தொடங்கி உள்ளது. இதனால் உச்சத்தில் இருந்த இதன் விலை தற்போது ஓரளவு குறைந்துள்ளது. சில நாட்களுக்கு முன்பு பெல்லாரி வெங்காயம் கிலோ 70 ரூபாய்க்கும் அதிகமாக விற்றது. அப்போது இப்பகுதியில் வெங்காயம் வரத்து முற்றிலும் இல்லாமல் இருந்தது. வெளிமாநிலங்களில் இருந்து வெங்காயம் கொண்டு வரப்பட்டது. தொடர்மழை பெய்ததால் விளைச்சல் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. வெங்காயப்பயிர்கள் நீளமாக வளர்ந்திருந்த போதிலும் வெங்காயம் பெரிதாகாமல் இருந்தது. எதிர்பார்த்த அளவிற்கு மகசூல் எடுக்க முடியவில்லை. விளைச்சல் குறைந்திருந்த போதிலும் நல்ல விலை கிடைக்கும் என்று நினைத்த விவசாயிகள் விலை குறைந்து வருவதால் கவலையடைந்துள்ளனர்.விளைச்சல் குறைவான பெல்லாரி வெங்காயம் தற்போது கிலோ ரூ.20க்கும் குறைவாகவே விற்கிறது. இருந்தபோதிலும் நல்ல தரமான உருட்டு வெங்காயம் 30 ரூபாய்க்கு மேல் விற்றது.இதேபோல் தக்காளி விலையும் சரிவை கண்டுள்ளது. தக்காளி ஒரு பெட்டி (14 கிலோ) ரூ.140க்கு விற்றது. கொத்தவரை கிலோ 25 ரூபாய்க்கும், வெண்டை 27 ரூபாய்க்கும் விற்றது.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *கேரள மாநிலத்தில் 1 கிலோ முருங்கைக்காய் விலை ரூ.250 வரலாறு காணாத விலை உயர்வால் பொதுமக்கள் அதிர்ச்சி*

*பாலக்காடு,ஜன.28–*
*கேரளாவில் ஒரு கிலோ முருங்கைக்காய் விலை ரூ.250–க்கு விற்பனை ஆகிறது. வரலாறு காணாத இந்த விலையால் நுகர்வோர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.*
*முருங்கைக்காய் விலை*
*கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டம் ஒற்றப்பாலத்தில் உள்ள காய்கறி மார்க்கெட்டில் காய்கறிகள் இருமடங்கு விலைக்கு விற்பனை ஆகிறது. இந்தநிலையில் 1 கிலோ*

முருங்கைக்காய் விலை ரூ.250–க்கு விற்பனை ஆகிறது. இது இதுவரை இல்லாத வரலாற்று காணாத விலையாகும்.
இது குறித்து அந்த பகுதி வியாபாரிகள்கூறியதாவது:–
தற்போது 1 கிலோ முருங்கைக்காய் ரூ.240 முதல் 250 வரை விலை போகிறது. கடந்த தை மாதத்து க்கு பின்னர் திருமண சீசன் வந்ததால் காய்கறி விலைகள் கூடியது. குறிப்பாக கேரள திருமண விருந்து களில் கூட்டு, மற்றும் சாம்பாரில் முருங்கைக்காய் அவசியம் தேவைப்படுகிறது. இதனால் தற்போது முருங்கைக்காய் விலை அதிகரித்து உள்ளது.
உயர்வுக்கு காரணம் என்ன?
முருங்கைக்காய் கேரளாவில் அதிக அளவில் பயன்பாட்டுக்கு உள்ளதாலும், விளைச்சல்குறைவு காரணமாகவும், அண்டை மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திர மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்படுகிறது. அதிக அளவில் கேரளாவுக்கு முருங்கைக்காய் தேவைப்படுவதால் அந்த மாநிலங்களிலும் முருங்கைக்காய் விலையை உயர்த்திவிட்டனர்.
இவ்வாறுஅவர்கள் கூறினர்.
இந்த நிலையில் மார்க்கெட்டுகளில் முருங்கைக்காய் விலை உயர்வு காரணமாக அவற்றை வாங்குவதற்கு நுகர்வோர்கள் பயப்படுகின்றனர். முக்கிய விருந்துகளுக்கு மட்டுமே அவசிய தேவையாக முருங்கைக்காய் வாங்கப்படுகிறது.

## ஜனவரி 15–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பொருள் பணவீக்கம் 15.57 சதவீதமாக உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
ஜனவரி 15–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், நாட்டில் உணவு பொருள்களுக்கான பணவீக்கம், முந்தைய வாரத்தைக் காட்டிலும் 0.05 சதவீதம் அதிகரித்து 15.57 சதவீதமாக உயர்ந்துள்ளது. முந்தைய வாரத்தில் இது, 15.52 சதவீதமாக இருந்தது.
மீண்டும் உயர்வு
தொடர்ந்து இரண்டு வாரங்களாக குறைந்து வந்த இந்த பணவீக்கம், தற்போது மீண்டும் உயர்ந்துள்ளது. சென்ற நவம்பர் மாதத்தில் நாட்டின் தொழில்துறை உற்பத்தி வளர்ச்சி கடந்த 18 மாதங்களில் இல்லாத அளவிற்கு 2.7 சதவீதமாக சரிவடைந்துள்ள நிலையில், உணவு பணவீக்கம் உயர்ந்து வருவது, மத்திய அரசுக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. மக்கள் அன்றாடம் அதிகம் பயன்படுத்தும், வெங்காயம் விலை குறையும் வகையில்

மத்திய அரசு ஏற்றுமதிக்கு தடை விதித்தது. பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக பாரத ரிசர்வ் வங்கி, அண்மையில் முக்கிய கடன்களுக்கான வட்டியை 0.25 சதவீதம் உயர்த்தியுள்ளது.

சென்ற ஓர் ஆண்டு காலத்தில் காய்கறிகள் விலை 67.07 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், வெங்காயம் விலை 111.58 சதவீதம் அதிகரித்துள்ளது. பழங்கள் மற்றும் பால் விலை முறையே 16.40 சதவீதம் மற்றும் 12.44 சதவீதம் உயர்ந்துள்ளது.

முட்டை – இறைச்சி

முட்டை, இறைச்சி மற்றும் மீன் விலை 13.58 சதவீதம் உயர்ந்துள்ளது. கடந்த வாரங்களில் சற்று குறைந்து இருந்த உணவு தானியங்கள் விலையும் உயர்ந்துள்ளது. அரிசி விலை 2.79 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேசமயம் கோதுமை மற்றும் பருப்பு வகைகள் விலை முறையே 5.75 சதவீதம் மற்றும் 14.07 சதவீதம் குறைந்துள்ளது.

பொது பணவீக்கம்

சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்க விகிதம் 7.48 சதவீதமாக இருந்தது. இது, சென்ற டிசம்பர் மாதத்தில் 8.43 சதவீதமாக உயர்ந்துள்ளது. நடப்பு நிதி ஆண்டில் பொது பணவீக்க விகிதம் 7 சதவீதமாக இருக்கும் என்று ரிசர்வ் வங்கி அதன் ஆய்வு அறிக்கையில் தெரிவித்துள்ளது. இது, 5.5 சதவீதமாக இருக்கும் என முன்பு மதிப்பீடு செய்து இருந்தது.

இந்நிலையில் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருவதும் ஒரு இடர்பாடாக அமைந்துள்ளது. உணவு பணவீக்கம் அதிகரிப்பு, நாட்டின் பங்கு வர்த்தகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.